**O.S.No. 9/2023**

**Date 24.07.2025**

**பி.வா.சா.1 வெள்ளத்துரை**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது தகப்பனார் பெயர் சின்னத்துரை என்றால் சரிதான். எனது தகப்பனாரின் தகப்பனார் பெயர் பெரியகோட்டி தேவர். மேற்படி பெரியகோட்டிதேவரின் தகப்பனார் பெயர் பெரியகாத்தப்ப தேவர். மேற்படி பெரியகாத்தப்ப தேவருக்கு பெரிய கோட்டிதேவர், சின்ன கோட்டிதேவர் என்ற இரண்டு மக்கள் என்றால் சரிதான். மேற்படி நபர்கள் இருவரும் குடும்ப சொத்துக்களை பிரித்துகொண்டனர் என்றால் சரிதான். மேற்படி பெரிய கோட்டிதேவருக்கு இரண்டு மக்கள் எனது தகப்பனார் சின்னத்துரை, ராமசந்திர தேவர் ஆகும். மேற்படி சின்னத்துரையும் ராமசந்திரதேவரும் சொத்துக்களை பிரித்துகொண்டனர் என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு நாங்கள் 5 மக்கள் ஆவோம். மேற்படி 5 மக்களில் அய்யாத்துரை, 1ம் பிரதிவாதியாகிய நான், 2ம்பிரதிவாதி சண்முகச்சாமி, 4,5 பிரதிவாதிகள் வாரிசுகள் என்றால் சரிதான். எனது தாயார் பெயர் சுப்பம்மாள் 3ம் பிரதிவாதி ஆவார். எனது சகோதரர் அய்யாத்துரை காலமாகிவிட்டார் என்றால் சரிதான். மேற்படி அய்யாத்துரையின் வாரிசுகள் தான் 1 வாதி மனைவி, 2,3 வாதிகள் மக்கள் என்றால் சரிதான். மேற்படி அய்யாத்துரைக்கு மற்றொரு மனைவி உண்டு என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி அய்யாத்துரைக்கு மற்றொரு மனைவி மாரியம்மாள் உண்டு என்று எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேன். நான் இவ்வழக்கிற்காக மோசடியாக எனது சகோதர் அய்யாத்துரைக்கு மாரியம்மாள் என்ற மற்றொரு மனைவி உண்டு என்று பொய்யாக சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி அய்யாத்துரை என்பவர் 1ம் வாதியை தவிர வேறு யாரையும் திருமணம் செய்தது கிடையாது என்றாலும், அய்யாத்துரைக்கு 2, 3 வாதிகளை தவிர வேறு மக்களும் கிடையாது என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் அனைத்தும் எனது

சகோதரர் அய்யாத்துரை, 1, 2 பிரதிவாதிகளுக்கு கூட்டாக பாத்தியப்பட்டது என்றால் ஒரு சில சொத்துக்கள் தான் கூட்டாக பாத்தியப்பட்டது. மற்ற சொத்துக்கள் எவ்வாறு பாத்தியம் என்றால் எனக்கு தனிப்பட்ட முறையில் கிரையம் மூலம் பாத்தியப்பட்டது. அவ்வாறு கிரையம் மூலம் எந்ததெந்த சர்வே எண்ணில் எவ்வளவு விஸ்தீரணம் எனக்கு பாத்தியப்பட்டது என்றால் சர்வே எண் குறித்து கூற இயலாது ஆவணங்களை நான் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி கிரையங்கள் யாரிடம் பெற்றேன் என்றால் ராமசந்திரதேவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அவரது மகன் மணிகண்டனிடம் கிரையம் பெற்றுள்ளேன். ஒரு சில சொத்துக்களை நான் மட்டும் கிரையம் பெற்றுள்ளேன். ஒரு சில சொத்துக்களை நானும், 2ம் பிரதிவாதியும் சேர்ந்து கிரையம் பெற்றுள்ளோம். மேற்படி மணிகண்டனிடம் இருந்து கிரையம்பெற்ற சொத்துக்களில் ஒரு சில சொத்துக்கள் மணிகண்டனின் தகப்பனார் ராமசந்திர தேவருக்கு பூர்வீக சொத்துக்களை பாகம் கொண்ட சொத்துக்களையும் கிரையம் பெற்றுள்ளேன். பி.வா.சா.ஆ.4 ஆவணத்தை மணிகண்டன் பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்று கூறி தான் ஆவணம் ஏற்படுத்திகொடுத்துள்ளார் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை மணிகண்டன் பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்று கூறி தான் கிரைய ஆவணம் ஏற்படுத்திகொடுத்துள்ளார் என்றால் சரிதான். எனது சகோதரிகள் 4, 5 பிரதிவாதிகளுக்கு அவர்களது பங்கிற்கு ஈடாக நகைகள் கொடுத்து வாய்மொழியாக பிரித்து கொண்டோம் என்றால் அவ்வாறு பிரிவினை செய்யவில்லை, 4,5 பிரதிவாதிகளுக்கும் சொத்தை தர தயாராக உள்ளோம். அய்யாத்துரை வீடு கட்டிய 40 செண்ட் நிலத்தை பொறுத்து 1, 2 பிரதிவாதிகள் பாகம் செய்து கொண்டோம் என்றால் சரியல்ல. மேற்படி 40 செண்ட் நிலத்தில் ஒரு பகுதியில் வீடு உள்ளது என்றால் சரிதான். மேற்படி வீட்டில் வாதிகள் குடியிருந்து வருகின்றனர் என்றால் சரிதான். வாதிகள் எனது சகோதர் அய்யாத்துரை வாரிசுகள் எங்களிடம் பாகம் கேட்டதால் தான் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. அவர்கள் பாகம் எதுவும் கோரவில்லை.

அவர்களாக தான் வழக்கு தாக்கல் செய்துள்ளனர். நானும் 2ம் பிரதிவாதியும் கிரையம் பெற்ற சொத்துக்களை தவிர எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட எனது தகப்பனார் சின்னத்துரை பாகத்திற்கு கிடைத்த பூர்வீக சொத்துக்கள் எவ்வளவு விஸ்தீரணம் என்றால் அதுகுறித்து தெரியாது. மேற்படி சொத்துக்களின் சர்வே எண்களும் எனக்கு சொல்ல தெரியாது. பிராது தபசில் சொத்துக்களை பொறுத்து ஏற்கனவே சின்னத்துரையின் ஆண்மக்களான அய்யாத்துரை, 1,2 பிரதிவாதிகளாகிய, 4,5 பிரதிவாதிகளாகிய பெண் மக்களுக்கு வாய்மொழி பாகம் நடந்தது என்றாலும், மேற்படி 4,5 பிரதிவாதிகளின் பங்கிற்கு ஈடாக நகைகளும் சீர்சீராட்டுகள் செய்துவிட்டதால் பிராது தபசில்சொத்துக்கள் அய்யாத்துரை, 1, 2 பிரதிவாதிகள் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டு, அய்யாத்துரை, 1, 2 பிரதிவாதிகள் தான் கூட்டாக அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட 40 செண்ட் நிலம் மட்டும் எனது தகப்பனார் சின்னத்துரை இறந்தபின்பு அய்யாத்துரை மற்றும் 1, 2 பிரதிவாதிகளுக்கு இடையில் 15 செண்ட் என பாகம் செய்து கொண்டோம் என்றால் சரியல்ல. அய்யாத்துரைக்கு கிடைத்த 15 செண்ட் நிலத்தை மேற்படி அய்யாத்துரையும் 1ம் வாதியும் வீடு கட்டி குடியிருந்து வந்தனர் என்றால் சரியல்ல. அய்யாத்துரை இறந்த பின்பு வாதிகள் தாவா சொத்தை பாகம் கேட்டதின் பேரில் நான் விரோதம் கொண்டு ஒரு சில சொத்துக்களைபொறுத்து, எனது பெயருக்கு வாதிகளுக்கு தெரியாமல் பட்டா மாற்றம்செய்து கொண்டு வாதிகள் வீட்டில் குடியிருக்க நான் இடையூறு செய்து வந்தேன் என்றாலும், அதனால் வாதிகள் வழக்கு தாக்கல் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதிகளை நான் பார்த்ததுகிடையாது. வாதிகளுக்கு பாகம் கிடைக்ககூடாது என்ற கெட்ட எண்ணத்தில் எனது சகோதர் அய்யாத்துரைக்கு மற்றொரு மனைவி, மக்கள் உண்டு என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிர்வழக்குவிவரங்கள் பொய்யானது என்றாலும் வாதிகள் கோரியவாறு வழக்கு அனுமதிக்கப்பட வேண்டியது என்றாலும் சரியல்ல.

**ம.வி இல்லை.**